1980 ஜூலை 12] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

வருகிறது. கடந்த இரண்டாண்டுகளாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில், அவர்கள் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் 3,689 முறை தனி ஆய்வுக் குழு, பொது ஆய்வுக் குழு என்ற இரண்டு ஆய்வுக் குழுக்கள் வாயிலாக ஆங்காங்கு அவ்வப்போது பார்வையிட்டு பரிசோதனை செய்து அப்படிப்பட்ட ஆய்வு செய்து அதன்காரணமாக இன்றையதினம் 258 பணியாளர்கள்—மார்க்கட்டிங் பெர்ஸணல்ஸ்—மீது 96 வழக்குகள் போட்டு இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்தார்கள் என்பதற்காக இன்றையதினம் நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில இப்படிப்பட்ட குறைபாடுகள எதிர்காலத்தில் குறையவும், அந்தக் குறைகளைப் போக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, சென்னையில் பால்வள நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற பால் சில வேளைகளில் பாலைக் காய்ச்சுகின்றபோது, அந்தப் பால் திரிந்து போய்விடுகிறது என்று பொதுமக்களிடையே குறைபாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த புட்டிகளில் அடைத்துக் கொடுக்கின்ற பால் புட்டிக்கு மேலே இலேசான அலுமினிய அடைப்பு போட்டுக் கொடுப்பதால், அதைகூட எளிதில் எடுத்துவிட்டு, அதிலே தண்ணீரைக் கலப்பதற்கு ஏதுவாக இருக்கின்ற காரணத்தினால், சோடா புட்டிகளில் போடுவதுபோன்ற கெட்டியான மூடிகள் போட்டு பாலை வழங்குவதற்கான முயற்சியினை பால்வள நிறுவனம் மேற்கொள்ள இந்த அரசு ஈடுபடுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் சொன்னதுபோல் இப்படிப்பட்ட குறைபாடுகள் இப்போது சில இடங்களிலே நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அரசு முயற்சித்து வருகின்றது.

4. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்களது அறிவிப்புகள்.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பட்டுக்கோட்டை போன்ற எல்லாப் பகுதிகளிலேயும் வெள்ளம் ஓடிக் கொண்டி

[திரு. மு. அம்பிகாபதி] [1980 ஜூலை 18

ருக்கின்றபோது, என்னுடைய பகுதியிலே மாத்திரம் சில அதிகாரிகள் பண்ணுகின்ற சதியால் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் நிலைமை இருக்கின்றது. இது குறித்து நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இம்பார்ட்டென்ட் அண்டு இம்மிடியட் மேட்டர். நீங்கள் அதை எடுக்கவிலலை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு நாளைக்கு ஒன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. இன்றைக்கு இரண்டு சிறுவர்கள் நரபலி கொடுக்கப்பட்ட முக்கியமான விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதை மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டிருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற வகையில் இன்றைக்கு அது முடிந்து விட்டது. வரிசைக் கிரமத்தில் மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்.

திரு. மு. அம்பிகாபதி : தமிழ்நாட்டிலே இன்றைக்கு எல்லாப் பகுதிகளிலேயும் வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியில் தண்ணீர் வராதது ரொம்ப கஷ்டம்தான். பொதுப் பிரச்னையில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். தொகுதிப் பிரச்னைகள் பின்னர் கவனிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : கீழே இருக்கின்ற சில அதிகாரிகள் சதி பண்ணுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்திற்குச் சொல்லி விசாரிக்கச் சொல்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே......

MR. SPEAKER : What is the point the hon. Member wishes to make ?

THIRU J. HEMACHANDRAN : On 9—7—1980 I have given notice of an adjournment motion regarding handloom workers strike at Kanyakumari. On 10—7—1980 it has been converted into a Call Attention Notice Under Rule 54. On 2—7—1980 on the same subject I have already given a Call Attention Notice under Rule 54 and it has not yet been disposed of.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட பிரச்னைகளை எல்லாம் நீங்கள் என் அறைக்கு வந்து சொல்ல வேண்டும் ; அவையில் கேட்கக் கூடாது.